
# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 7 ஜூலை 2019 ₹1.00


## புரட்சித் தலைவி அம்மா அரங்கம் திறப்பு





மாதவரம் பால்பண்ணையில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமை நிலைய வளாகத்தில் ரூபாய் 1,276.00 இலட்ச மதிப்பில் ஒரு கலையரங்கமும் சிறிய கூடமும் கொண்டதாகப் "புரட்சித் தலைவி அம்மா அரங்கம்" கட்டப்பட்டுள்ளது. இந்த அரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.06.2019அன்று சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சிமூலம் திறந்துவைத்தார்கள்.


## வெண்பன்றி வளர்ப்பு குறித்த மாநில அளவிலான கருத்தரங்கு மற்றும் கண்காட்சி



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறையும் கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் இணைந்து "தமிழ்நாட்டில் வெண்பன்றி வளர்ப்பில் தற்போதைய நிலை, சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள்" எனும் மாநில அளவிலான கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியைக் கோயம்புத்தூர், எஸ்எம்எஸ் மஹாலில் 22.06.2019, 23.06.2019 ஆகிய நாட்கள் நடத்தின. 22.06.2019அன்று நடைபெற்ற கருத்தரங்கின் துவக்க விழாவில் தமிழக நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் கருத்தரங்கு மலரை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கோவை மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் சு. சின்னசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் கருத்தரங்கப் பங்கேற்பாளர்களை வாழ்த்திப் பேசினார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் (பொ.) முனைவர்

த. இராமசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். கருத்தரங்கில் பங்கேற்ற தமிழ்நாடு மற்றும் பிற மாநில வல்லுநர்கள் வெண்பன்றி வளர்ப்பில் தற்போதைய நிலை, சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள், பன்றிகளின் மரபு வளம், செயற்கை முறைக் கருவூட்டல், தீவன மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், மதிப்பூட்டிய இறைச்சிப் பொருட்கள் தயாரித்தல், பன்றிகளைத் தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும், பண்ணைகளில் ஈக்களைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்துச் சிறப்புரை வழங்கினர். தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த 271 பண்ணையாளர்கள் கருத்தரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

## புதுமையான விரிவாக்க மேலாண்மை அணுகுமுறைகள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கம்




சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறையும், ஹைதராபாத், தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையமும் இணைந்து "பண்ணையாளர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான புதுமையான விரிவாக்க மேலாண்மை அணுகுமுறைகள்" எனும் பன்னாட்டுக் கருத்தரங்கைச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 27.06.2019 முதல் 28.06.2019 வரை நடத்தின. 27.06.2019 அன்று நடைபெற்ற கருத்தரங்கின் துவக்க விழாவில் ஹைதராபாத், தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத் தலைமை இயக்குநர் திருமதி உஷா ராணி இ.ஆ.ப. அவர்கள் கருத்தரங்க ஆய்வுக் கோவை வெளியிட்டுத் துவக்கவுரை ஆற்றினார். அவர் தம் உரையில் வளர்ச்சித் திட்டத்தின் தாக்கத்தினைக் கண்டறிய வேண்டும் என்றும் வேளாண் மற்றும் கால்நடைத் துறைகள் சேர்ந்து பணியாற்றி ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்குப் பாடுபட வேண்டும் என்றும் கூறினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். அவர் தம் உரையில் களப் பணியில் உள்ள கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களுடைய அறிவுத் திறனை மேம்படுத்த முடியும் என்றார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன், பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் (பொ.) முனைவர் த. இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் கருத்தரங்கின் அமைப்புச் செயலாளர் முனைவர் பெ. மதியழகன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். கால்நடை விரிவாக்கக் கல்வித் துறையின் உதவிப் பேராசிரியர் பொ.திலகர் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் தேசிய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள், மாநிலக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநிலக் கால்நடைப் பராமரிப்புத் துறையிலிருந்து சுமார் 220 பேர் பங்கேற்றனர். மேலும், வங்கதேசம், அமெரிக்கா, எத்தியோப்பியா, இலங்கை மற்றும் நைஜீரியாவிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர். இக் கருத்தரங்கில் 125 ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஐந்து மையப் பொருள்களில் வழங்கப்பட்டன.

## 28ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்




பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்ககம்மூலம் 28ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 26.06.2019அன்று நடத்தப்பட்டது. கூட்டத்திற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் ஆராய்ச்சிக் குழுத் தலைவர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் தலைமையேற்றார். ஆராய்ச்சிக் குழு உறுப்பினர் செயலர் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ.ஹரிகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தின் புறநிலை வல்லுநர்களான ஐதராபாத், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கோழியினத் திட்ட இயக்கக இயக்குநர் முனைவர் ஆர்.என். சாட்டர்ஜீ மற்றும் திருப்பதி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்க இயக்குநர் முனைவர் டி. ஸ்ரீநிவாசுலு, அரசு நியமனம் செய்த சிறப்பு வல்லுநர் மற்றும் பல்கலைக்கழக முன்னாள் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் வி. புருஷோத்தமன், அரசு நியமனம் செய்த முன்னோடி விவசாயிகளான கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, கஞ்சம்பட்டி திரு. சி. சௌந்தரராஜன் மற்றும் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெதப்பம்பட்டி திரு. செ.பாண்டியன், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்ககத்தின் கூடுதல் இயக்குநர் (கால்நடை அபிவிருத்தி) மருத்துவர் டி. ராஜா மனோகரன் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினர். மேலும், பல்கலைக்கழக அதிகாரிகள், நியமனம் செய்யப்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்; ஆராய்ச்சி நிலையங்கள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் மையங்கள் மற்றும் உழவர் பயிற்சி மையங்களின் தலைவர்கள் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் துறைத் தலைவர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். ஆராய்ச்சிக் குழு உறுப்பினர் செயலர் மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் அவர்கள், 27ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டப் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துத் தெரிவித்தார். மேலும், 2018–19ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 89.04 கோடி மதிப்பீட்டில் பல்கலைக்கழகம் பெற்ற 38 புதிய திட்டங்கள், கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பெற்ற விருதுகள் / அங்கீகாரங்கள் / சான்றிதழ்கள், வழங்கப்பட்ட காப்புரிமைகள் மற்றும் வெளியிடப்பட்ட / வர்த்தகமயமாக்கப்பட்ட பல்கலைக்கழகத் தொழில்நுட்பங்கள் ஆகியவை குறித்து விளக்கினார். நடப்பிலுள்ள ஏழு முக்கிய ஆராய்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் 2018–19இல் முடிவுற்ற ஏழு ஆராய்ச்சித் திட்டங்களின் ஆராய்ச்சி முடிவுகள் குறித்து முதன்மை அறிவியலறிஞர்கள் கூட்டத்தில் விளக்கினர். ஆராய்ச்சிக் குழுக் கூட்டத் தலைவர், 28ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தில் தங்களது கருத்துகளை வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார். ஆராய்ச்சி இயக்ககப் பேராசிரியர் முனைவர் பா. குமரவேல் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## 30ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம்




பல்கலைக்கழகத்தின் 30ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 26.06.2019அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் தலைமை வகித்து ஆலோசனைகள் வழங்கினார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர்(பொ.) மற்றும் விரிவாக்கக் கல்விக் குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் த. இராமசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றி, 29ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் 2018ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பணி விவரங்களை எடுத்துரைத்தார். புற நிலை விரிவாக்க வல்லுநர்களான பீதர், கால்நடை அறிவியல் மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கே.சி.வீரண்ணா, ஐதராபாத், தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகத்தின் முதன்மை அறிவியலாளர் முனைவர் டி. தம்மிராஜு, தமிழ்நாடு அரசின் நியமன உறுப்பினர்களான கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி திரு. வி. ரங்கராஜன், திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் திரு. கே. துரையரசன் மற்றும் உடுமலைப்பேட்டை திரு. எம். குமாரவேல், விரிவாக்கக் கல்விக் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் உழவர் பயிற்சி மையங்களின் தலைவர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். கூட்ட முடிவில் தேனி, உழவர் பயிற்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். முருகேசன் அவர்கள் நன்றி கூறினார்.

## உலகப் பால்வள நாள்




கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியும் இந்தியப் பால்வளச் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவும் இணைந்து உலகப் பால்வள நாளை 08.06.2019அன்று கொண்டாடின. நிகழ்ச்சியில் சென்னை சங்கரா நேத்ராலயப் பொது மேலாளர் (மனித வளம்) திருமதி நிர்மலா குரியன், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். இந்தியப் பால்வளச் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் முனைவர் சி. நரேஷ்குமார், இந்தியப் பால்வளச் சங்கத்தின் தென் மண்டலத் தலைவர் திரு. சி.பி. சார்லஸ் ஆகியோர் பங்கேற்றனர். உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ப. தனலட்சுமி அவர்கள் வரவேற்பு ஆற்றினார். மேலும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் வினாடிவினாப் போட்டி மற்றும் மின் சுவரிதழ் அளித்தல் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பால்வளத் துறை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் தொழில்துறையினர், உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## பயிற்சி

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையில் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த கால்நடை மருத்துவர்களுக்குச் "செல்லப்பிராணிகளில் இதயம் சார்ந்த நோய்களின் தற்போதைய போக்குகள்" பற்றிய பயிற்சி 01.06.2019 முதல் 03.06.2019 வரை நடத்தப்பட்டது. இதில் 10 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர்களுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக வளர்ச்சி நிதியின் கீழ் ஹைதராபாத், தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிலைய வல்லுநர்களால் 06.06.2019, 07.06.2019 ஆகிய இரு நாட்கள் "புதுமையான கற்பித்தல் முறைகள்" பற்றியப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கால்நடை நுண்ணுயிரியியல் துறையில் விலங்கின நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான மாநிலங்களுக்கான உதவித் திட்ட நிதியுதவியில் "பறவை காய்ச்சல்–தயார் நிலை மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்" பற்றிய பயிற்சி 18.06.2019அன்று நடத்தப்பட்டது. பயிற்சியின் துவக்க விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பறவைக் காய்ச்சல் கட்டுப்படுத்துதலின் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். நாமக்கல், கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் மருத்துவர் வி.பி. பொன்னுவேல் அவர்கள் தலைமையுரை வழங்கினார். கால்நடை நோய்ப் புலனாய்வுத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் பி. வேல்முருகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பயிற்சியில் மொத்தம் 33 கால்நடை ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.
- ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் "கோழியின முட்டைகளின் தரப் பரிசோதனை" குறித்த பயிற்சி, 24.06.2019 முதல் 28.06.2019 வரை சுகுணா



கோழியின நிறுவனத் தொழில்நுட்பர்களுக்கு வழங்கப்பட்டது. பயிற்சியினைக் கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி அவர்கள் துவக்கிவைத்தார். பயிற்சியில் மொத்தம் 12 பேர் பங்கேற்றனர்.

### பண்ணையாளர்கள் பயிலரங்கம்

சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்ற நிதியுதவியுடன் "புவி வெப்பமயமாதலால் மாறிவரும் தற்போதைய தமிழ்நாட்டின் பருவநிலை மாற்றச்சூழலில் நிலையான கால்நடை உற்பத்திக்கு மண்ணில்லாப் பசுந்தீவனத் தயாரிப்புத் தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்துதல்" என்ற பயிற்சி 12.06.2019 முதல் 14.06.2019 வரை காட்டுப்பாக்கம், கால்நடை உணவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். 14.06.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் மடிப்பிதழ் வெளியிட்டுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் மற்றும் இடுபொருட்களை வழங்கி, நிறைவுரை ஆற்றினார். பயிற்சியில் 48 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

### திறன் மேம்பாட்டுப் பயிற்சி

- மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதியுதவியுடன் கறவை மாட்டுப் பண்ணையம் பற்றிய பயிற்சி 17.06.2019 முதல் 21.06.2019 வரை நடைபெற்றது. பயிற்சியில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 20 கிராமப்புற இளைஞர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.
- தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை சார்பில் "கறவை மாடு வளர்ப்பு" பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்ட கிராமப்புற இளைஞர்களுக்கு 24.06.2019 முதல் 28.06.2019 வரை திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடத்தப்பட்டது. பயிற்சியில் 29 பேர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கான




கறவை மாடு வளர்ப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி 25.06.2019 முதல் 29.06.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் 15 பேர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### கிராமப்புறச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கரூர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மைய நிதியுதவியுடன் "கோழி வளர்ப்புப் பயிற்சி" 27.05.2019 முதல் 10.06.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சியின் துவக்க விழாவில் நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. எம். பரமேஸ்குமார் அவர்கள் பங்கேற்று, நபார்டு வங்கிக் கடன் உதவி மற்றும் மானியத் திட்டங்கள் குறித்து விளக்கிக்கூறினார். பயிற்சியில் கிராமப்புற இளைஞர்கள், பண்ணை மகளிர் உட்பட மொத்தம் 29 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

### கிராமத் தத்தெடுப்புத் திட்டம்

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மாவட்டச் சுகாதாரப் பணிகள் துறையுடன் இணைந்து பல்கலைக்கழகத்தின் "கிராமத் தத்தெடுப்பு" திட்டத்தின் கீழ் கரூர், ஜல்லிபட்டி கிராமத்தில் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாமை 20.06.2019அன்று நடத்தியது. முகாமில் 72 பள்ளி மாணவர்கள் மற்றும் 80 பொது மக்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.
- வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் வேலூர் கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இணைந்து, கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டம், செம்பராயநல்லூர் கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாமினை 20.06.2019அன்று நடத்தியது. முகாமில் சுமார் 78 கால்நடைகளுக்குச் சிகிச்சை, குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசிகள் அளிக்கப்பட்டன.

### உலகச் சுற்றுச்சூழல் நாள்

- உலகச் சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டுக் கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் செயின்ட் தன்னார்வ நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை 06.06.2019அன்று கரூர், மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடத்தியது.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறை சார்பில் உலகச் சுற்றுச்சூழல் நாள்–2019ஐ முன்னிட்டு 04.06.2019அன்று மரக்கன்று நடும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா.மோகன் அவர்கள் முன்னிலையில் நாமக்கல், மாவட்ட வன அலுவலர் மருத்துவர் ஆர். காஞ்சனா இ.வ.ப. அவர்கள் மரக்கன்று நடும் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார்.

### சிறப்பு விரிவுரை

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வெறிநோய் ஒழிப்பு இயக்கம் சார்பில் 24.06.2019அன்று "வெறிநோய் கட்டுப்படுத்தல் மற்றும் நாய்களின் எண்ணிக்கை மேலாண்மை" குறித்த சிறப்பு விரிவுரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் பனாஜி, இந்திய வெறிநோய் ஒழிப்பு இயக்க இயக்குநர் (கல்வி) மருத்துவர் முருகன் அப்புபிள்ளை, தஞ்சை மருத்துவக் கல்லூரியின் அகமருத்துவத் துறையின் உதவிப் பேராசிரியர் மருத்துவர் எ. வினோத் ஆகியோர் சிறப்பு விரிவுரை வழங்கினர். நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மற்றும் இளநிலைப் பட்ட நான்காமாண்டு மாணவர்கள் பங்குபெற்றுப் பயன்பெற்றனர்.

### ராகிங்கிற்கு எதிரான குழுக் கூட்டம்

ராகிங்கிற்கு எதிரான குழுவின் கூட்டம் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் குழு உறுப்பினர்களை வரவேற்றுக் கூட்டம் நடைபெறுவதற்கான நோக்கத்தையும் ராகிங்கை முற்றிலும்

ஒழிப்பதன் முக்கியத்துவத்தையும் விளக்கியுரைத்தார். கூட்டத்தில் கல்லூரியின் கல்விச் சிறப்புப் பிரிவின் இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம். செல்லப்பாண்டியன், மாணவர் மன்றத் துணைத் தலைவர் முனைவர் எஸ்.சி. எட்வின், தினமலர் செய்தி சேகரிப்பாளர் திரு. கே. செல்வகுமார் மற்றும் ராகிங்கிற்கு எதிரான குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

### கருத்துப் பரிமாற்றம் மற்றும் மென்திறன்கள் குறித்த பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குப் கருத்துப் பரிமாற்றம் மற்றும் மென்திறன்கள் குறித்த பயிற்சி முறையே 24.06.2019 மற்றும் 25.06.2019, 27.06.2019 மற்றும் 28.06.2019ஆம் தேதிகளில் அளிக்கப்பட்டது.

### உலக யோகா நாள் – 2019

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 21.06.2019அன்று "உலக யோகா நாள்" கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட யோகா சங்கத்தின் வல்லுநர்கள் யோகா குறித்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கற்பித்தனர். மேலும், சங்கச் செயலாளர் திரு. கே. மணிவண்ணன் அவர்கள் "ஆரோக்கிய வாழ்விற்கும் அமைதியான மனதிற்கும் யோகா" என்ற தலைப்பில் உரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றினார். நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் "உலக யோகா நாள்" 21.06.2019அன்று கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டுப் புதுதில்லி, பன்னாட்டு இயற்கை மருத்துவ அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. டி. மனோகரன் தலைமையிலான வல்லுநர் குழுவினர் யோகா வகுப்பு நடத்தினர். மேலும், இராமேஸ்வரம் மற்றும் திருநெல்வேலி அகில இந்தியத் தொலைக்காட்சி நிலையத் துணை இயக்குநர்



திரு.எம். நவநீதகிருஷ்ணன் அவர்கள் "மனதிற்கு யோகா" குறித்துச் சிறப்பு விரிவுரை வழங்கினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு யோகா குறித்த பயிற்சி வகுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, "உலக யோகா நாள்" 21.06.2019அன்று கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் தலைமை வகித்தார். 80 மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மேலும், கல்லூரியின் இளநிலைப் பட்ட மாணவர்கள் 64 பேர், மத்திய சுற்றுலாத் துறை 20.06.2019அன்று தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நடத்திய உலக யோகா நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### நாட்டுநலப் பணித் திட்டம்

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் நாட்டுநலப் பணித் திட்டச் சிறப்பு முகாம் மானூர் வட்டம், உகந்தான்பட்டி கிராமத்தில் 04.06.2019 முதல் 10.06.2019 வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.)



முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். முகாமையொட்டி ஆட்டுக் கிடாக்கள் கண்காட்சி நடத்தப்பட்டது. மேலும், 59 நாட்டின நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது. உலகச் சுற்றுச்சூழல் நாள் 2019ஐ முன்னிட்டு 50 மரக்கன்றுகள் நடப்பட்டன. தூய்மையான சுற்றுப்புறத்தைக் காக்கும் வகையில் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்ப்பதை வலியுறுத்தி, நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்களும் பள்ளி மாணவர்களும் விழிப்புணர்வு அணிவகுப்பு நடத்தினர்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் தத்தெடுக்கப்பட்ட கண்ணந்தங்குடி கீழையூர் கிராமத்தில் நாட்டுநலப் பணித் திட்டச் சிறப்பு முகாம் 03.06.2019 முதல் 09.06.2019 வரை நடைபெற்றது. முகாமில் கிராம மதிப்பீடு, பள்ளி மாணவர்களுக்கு ரத்த வகை கண்டறிதல், கால்நடை மருத்துவ முகாம், பல் சுகாதார முகாம், மதிப்புக் கூட்டிய பால் மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, கால்நடைகளுக்கான மூலிகை மருத்துவ விழிப்புணர்வு முகாம், மரக்கன்று நடுதல் ஆகியவை செயல்படுத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் 09.6.2019அன்று




முகாமில் பங்கேற்றுப் பயனாளிகளுக்கு மூலிகைச் செடிகள் மற்றும் தாதுப்புகளை வழங்கினார். முகாமில் 450 கிராம மக்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020
REGISTERED No.TN/CC(S)DN/569/18-20

Posted on 31.07.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

## பணி ஓய்வு



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் திரு. வி. பாலு அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 10.06.1961இல் பிறந்த இவர் 35ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலக இளநிலை உதவியாளர் திருமதி இரா. விஜயா அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 05.06.1961 இல் பிறந்த இவர் 5ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கோழியின நோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தல் ஆய்வகத்தின் தொழில்நுட்பர் (நிலை II) திரு. பி.கே. சபாபதி அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 05.06.1961 இல் பிறந்த இவர் 10 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தின் ஓட்டுநர் (சிறப்பு நிலை) திரு. சி. ரவி அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 20.06.1961இல் பிறந்த இவர் 25ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் உடனாள் (முதுநிலை) திரு.எம். ராமசந்திரன் அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 13.06.1959இல் பிறந்த இவர் 13 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத் திறனறி பணியாளர் (சிறப்பு நிலை) திருமதி எல். துந்தம்மாள் அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959 இல் பிறந்த இவர் 35ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத் திறனறி பணியாளர் திரு. எச். லிங்கையா அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 27ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத் திறனறி பணியாளர் திரு. பி. ராஜு அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 32ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் திறனில்லாப் பணியாளர் திருமதி பி.சென்னியம்மாள் அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 27 ஆண்டும் 08 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையப் பணியாளர் திருமதி எம். சிங்காரம் அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 29ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையப் பணியாளர் திருமதி கே. குஞ்சம்மாள் அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 13ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் விடுதிப் பணியாளர் திருமதி சி.நல்லம்மாள் அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 13ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் விடுதிப் பணியாளர் திருமதி என்.ராஜேஸ்வரி அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 06ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலசந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா